(2) அவையுரிமைக் கேள்வி.

திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் கூறாத கூற்றைக் கூறியதாகக் கூறியதுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையையொட்டி கருத்து வழங்குகிற நேரத்திலே இந்த மன்றத்திலே முதலமைச்சர் அவர்கள் கூறாதஒன்றைக் கூறினார்கள் என்றும் ஆனால் அந்த நிலையைப் பிறகு எடுத்துக்கூறுகின்றநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் இந்த அவையில் இல்லாத காரணத்தினால் அதற்கு அவர் இடத்திலிருந்து சமாதானம் பெற்று அதன்மீது முடிவு எடுக்கலாம் என்றும் இந்த அவைக்கு அறிவித்திருந்தேன். அவர்களுக்கு அந்த வாய்ப்பு அளித்தபோது அவர்கள் சமாதானம் ஏதும் கூறாத காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் கூறாத கூற்றைக் கூறியதாக அவர்கள் இந்த அவையிலேயே கூறியது உண்மையிலேயே உரிமை மீறிய நிகழ்ச்சியாகும் என்ற முடிவுக்கு வருகிறேன். ஆராய்ந்து முடிவுகூற அந்தப் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு நான் அனுப்புகின்றேன்.

(3) கவன ஈர்ப்பு.

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்சம் ஏற்பட்டுள்ளதால் கடன் வசூலை நிறுத்துவது, தவணையை நீட்டிப்பதுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் உறுப்பினர் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஓர் அவசர உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த காரியத்தைக் கொண்டுவருவார்கள்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 41-ன் கீழ், இராமநாதபுரம் மாவட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் வாங்கிய கடன் தொகையை வசூலிப்பதை நிறுத்தவும், தவணைகளை நீட்டிக்கவும் வேண்டியதுபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

The Hon. Thiru K. A. MATHIALAGAN : Sir, in February 1970 the Collector of Ramanathapuram had reported that due to failure of rains again, acute distress prevailed in several pockets in the district and requested among other things, that collection of Government dues might be postponed in such areas to afford relief.

The Government accepted the Collector's view and have since issued orders permitting the Collector to postpone collection of all Government loan instalments and land revenue dues during the current fasli in the following areas which were reported as worst affected :—

Srivilliputhur taluk—Nathampatti, Srivilliputhur and Malli firkas.

Aruppukkottai taluk—Tiruchuli firka.

Tirupathur taluk—Nachiapuram and Singampunari firkas.

However, these orders will not prevent the Collector from using his discretion in extending the concession to similarly affected parts in the district under intimation to Government.

பிற்பகல் 1)-00.

திரு. ஏ. அ. சுப்பராஜா: அரசாங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கடன்களை வசூலிப்பதில் 'கோ ஸ்லோ ப்ராஸஸில்' செல்ல வேண்டுமென்று சொல்லியும்கூட இன்னும் ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுகாவிலும், சாத்தூர் தாலுகாவிலும் கடன்களை வசூலித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அரசாங்கம் இந்த முக்கியமான விஷயத்தில் உத்தரவிட்ட பின்பும்கூட அதிகாரிகள் கடன்களை வசூலிப்பதில் கெடுபிடி செய்வதை இந்த அரசு அறியுமா? அமைச்சர் அவர்கள் இந்த நிலையை அறிந்து நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இரண்டு குற்றச்சாட்டுகளுமே சரியானவை அல்ல. அரசாங்கம் உத்தரவிட்டதே 25-ம் தேதி தான். அதற்குள்ளாக ஏதோ கொடுமைகள் பண்ணுகிறார்கள் என்று தகவல் வந்திருக்கிறது என்றால் எப்படி என்று தெரியவில்லை. ஃபோனில் தகவல் வந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். ஃபோனில் பேசுகிற அளவுக்கு சௌகரியமான விவசாயிகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எங்கெங்கு நிலைமை சிரமமாக இருக்கிறதோ அங்கெல்லாம் கடன்களை ஒத்திவைக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன, அதிகாரிகள் கண்டிப்பாக அரசாங்க உத்தரவின்படி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்கள்.

(ஆ) மாயவரத்தின் கிழக்கே உள்ள கடைமடைப் பகுதிகளுக்கு பாசன வசதி பாதிக்கப்படுவதுகுறித்து.

திரு. பி. ஜயராஜ்: தலைவர் அவர்களே, காவேரியில் 80/1 மைலில் மாயவரத்தின் அருகில் எப்/5 என்ற இடத்தில் காவேரியில் ஒரு ரெகுலேட்டர் கட்டி மேலே புதுத் தலைப்பு கொடுத்து எப்/4 ஆறுபாதி கால்வாயில் சேர்த்து அதன்மூலம் பழங்காவேரி ஆறுபாதி வகையறு ஆயக்கட்டுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுப்பதால் கிழக்கே உள்ள கடைமடைப் பகுதிகளான 15,000 எக்கருக்குமேல் பாசன வசதி பாதிக்கப்படுவதைப் பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, பழங்காவேரி வாய்க்கால் மைல் 76/1-2-ல் காவேரி வலது கரையில் ஆரம்பமாகிறது. இதன் ஆயக்கட்டு 2,540 ஏக்கர். மாயவரம் எல்லையில் உள்ள இந்த வாய்க்காலின் ஒரு பகுதி மணல் மேடிட்டு மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் மாயவரம் எல்லைக்குக் கீழே உள்ள அதன் ஆயக்கட்டான 2,29⁸ எக்கருக்குச் சரிவர பாசன நீர் வழங்க இயலவில்லை. இதன் ஆயக்கட்டுதாரர்கள் மேற்கண்ட குறையை நீக்கும்படி கோரியுள்ளனர். இத்திட்டம் தீர ஆராய்ந்து கீழ்க்கண்ட வேலைகளை செய்ய திட்டம் இடப்பட்டு உள்ளது:—

(1) குறிப்பிட்ட அளவு தண்ணீர் பழங்காவேரிக்கு வழங்க காவேரியின் குறுக்கே மைல் 80/1–530-ல் ரெகுலேட்டர் கட்டுவது.

(2) காவேரியின் வலது கரையில் மைல் 80/6–33 தலைப்பு கட்டுவது.

(3) பழங்காவேரியையும் மேல்கண்ட தலையமைப்பையும் இணைக்க இணைப்பு வாய்க்கால் வெட்டுவது.

இரண்டாவதாக குறிப்பிட்டுள்ள தலைப்பு, மாயவரம் எல்லைக்குக் கீழே உள்ள ஆயக்கட்டுக்கு மட்டும் போதுமான நீர் வழங்க கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் பழங்காவேரி, காவேரியிலிருந்து பிரியும் இடத்தில் விகிதாச்சாரப்படி தண்ணீர் வழங்க, இப்போதுள்ள கண்மாய் அளவைக் குறைக்க உத்தேசித்துள்ளது. இதனால் பழங்காவேரிக்கு அதிகப்படியான தண்ணீர் எடுத்துக்கொள்வதை கட்டுப்படுத்த முடியும். இந்தக் கண்மாய் மூலம் சுமார் 542 எக்கருக்கு மட்டும் தண்ணீர் வழங்க உத்தேசிக்கப்